15

எல்லைகள்

சுள்ளென்று வெயில் உறைக்கும் பிரக்ஞைகூட இல்லாமல் சைக்கியாட்ரி டிபார்ட்மெண்டை ஒட்டினாற் போலிருந்த அந்த நிழலே இல்லாத வராண்டாவில் யசோதா நின்றிருந்தாள்.

''முடியாது, என்னாலே இங்கு உட்கார முடியாது. நீங்க கேட்கிற கேள்விக்கெல்லாம் நா பதில் சொல்ல முடியாது.''

''மிஸ்டர் சர்மா, உங்களைக் கொஞ்சம் நிதானப்படுத்திக் கொள்ளுங்கள். பதட்டப்படாதீர்கள்.''

''பதட்டப்படாதீர்கள்! பதட்டப்படாதீர்கள்! இப்படிச் சொல்லிச் சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்காதீர்கள்!''

யசோதா நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

ஆஸ்பத்திரி பிரதான கட்டிடத்துக்குச் செல்லும் பாதையில் நடந்து செல்பவர்கள் உள்ளே சர்மா போடும் சத்தத்தைக் கேட்டு ஒரு விநாடி நின்று பார்த்து விட்டுப் போவதைக் கவனித்தாள்.

''எனக்கு வயசாகவில்லை என்று நினைத்தீர்களா? எனக்கு ஐம்பதாகப் போகிறது, இந்த அக்டோபருக்கு. என் இஷ்டப்படி நடந்து கொள்ள எனக்கு அதிகாரம் கிடையாதா? நீங்கள் சொல்கிறபடி நான் ஏன் கேட்க வேண்டும்?''

''ஈஸி மிஸ்டர் சர்மா! ரிலாக்ஸ்!''

''இதெல்லாம் ஏமாத்து வார்த்தைகள். ரிலாக்ஸ்! ரிலாக்ஸ்! அதுக்கு என்ன அர்த்தம்? நான் இப்பொழுது என்ன படபடத்துக் கொண்டா இருக்கிறேன்? யசோதா!''

யசோதா திடுக்கிட்டுத் திரும்பி அறையை நோக்கி நடந்தாள். அடிவயிற்றில் ஒரு ஜில்லிப்பும், மார்பில் ஒரு படபடப்பும் ஏற்பட்டன. ஓ, இவரை எப்படிச் சமாளிக்கப் போகிறோம்?

யசோதாவைப் பார்த்ததும் சர்மாவின் முகத்தில் ரௌத்திரம் ஏறிற்று.

''யசோதா!''

அந்தப் பார்வைக்கும், குரலுக்கும் கொல்லும் சக்தி இருந்தால்....?

''என்னை இன்னும் எத்தனை அவமானப்படுத்தப் போறே? உன்னுடைய அகங்காரத்துக்கு ஒரு லிமிட் கிடையாதா?''

சர்மா ஆத்திரத்துடன் கையை ஓங்கிக்கொண்டு வந்தார்.

யசோதா சரேலென்று பின்னால் நகர்ந்து கொண்டாள்.

டாக்டரும் அவருடைய ஆட்களும் சர்மாவைப் பிடித்துக் கொண்டார்கள்.

''நீங்கள் வெளியிலே இருங்கள் மேடம். நாங்கள் இவரைப் பார்த்துக்கொள்கிறோம்.''

யசோதா வெளியில் வந்து கண்களில், தளும்பியிருந்த நீரைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

என்ன செய்யப் போகிறோம்?

'ஆயுசு முழுவதும் இப்படியே இருப்பாரோ?'.... வெளியில் நிற்கமுடியவில்லை. வெயில் அனலைக் கொட்டிற்று. இத்தனை பெரிய ஆஸ்பத்திரியில் நிழலே விழாத இடத்தில் மனோதத்துவப் பகுதியை வைப்பார்களோ என்று அவளுக்கு சலிப்பேற்பட்டது. வேறு ஏதாவது பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போனால் நன்றாக இருந்திருக்குமோ? அரசாங்க மருத்துவமனையில் மனிதாபிமானத் தோடு நடந்துகொள்வார்களா?

நம்மை விடக் கண்டிப்பாக நன்றாக நடத்துவார்கள். நமக்குப் பொறுமையில்லை. அந்தக் கத்தலையும் ஆங்காரத்தையும் தினம் பார்க்கையில் இது ஒரு வியாதி என்கிற பிரக்ஞை போய், மனம் சோர்ந்த உடல் சோர்ந்த நிலையில் மனசில் வெறுப்பு மெல்ல மெல்ல புகுந்து கொள்ளுமுன் -

இங்கே கொண்டு வந்து விட்டாயிற்று. இவர்களுக்கு அவர் ஒரு வெறும் பேஷண்ட் என்கிற அஃறிணை. எந்தவித உணர்ச்சிப் பிடிப்பும் நெருக்கமும் அவருடன் அவர்களுக்கு இல்லை. அதனால் இவருடைய வார்த்தைகளினால் அவர்களுக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது. துக்கம் ஏற்படாது. கண்களில் நீரை வரவழைக்காது. ஆத்திரமும் கையிலாகாத் தனசோர்வும் மனசில் பொங்காது...

''நீ யாருய்யா, அவளை வெளியே நில்லுன்னு சொல்ல? அவ என் மனைவி. பார்க்க சின்ன பொண்ணாட்டம் இருந்தாலும் அவ என்

மனைவிதான். நா கிழவனாட்டம் தெரியறேன். ஆனா நா கிழவன் இல்லே... அவ சின்னப் பொண்ணாட்டம் தெரியறா, ஆனா சின்னப்பெண் இல்லே. வேடிக்கையா இருக்கா? ஆனா அது வேடிக்கையில்லே. வேஷம் சாமி, வேஷம். எனக்கு வேஷம் போடத் தெரியாது. நா வெளிப்படையாப் பேசுவேன். மனசிலே இருக்கிறதைப் பட்டுனு சொல்லுவேன். அதுக்குப் பேரு இவ என்ன சொல்றா தெரியுமா? ஹிஸ்டிரியா! ஹைபர் டென்ஷன்! அவதான் என்னை இங்கே இழுத்துண்டு வந்திருக்கா ஷி இஸ் எ ப்ளடி.....!''

யசோதாவின் கண்களில் குபீரென்று நீர் பெருகிற்று. அவள் அவசரமாகக் கைக்குட்டையால் கண்களை அழுத்தித் துடைத்தாள். பாதையில் நடப்பவர்கள் உள்ளே இருந்து வருகிற கத்தலையும் வெளியில் நிற்கிற அவளுடைய கண்களையும் கவனிப்பதைப் பார்த்து கூச்சமேற்பட்டது.

மனோதத்துவ டிபார்ட்மெண்டின் கட்டிடத்தை ஒட்டி இடது புறமாக சென்ற பாதையில் இருந்த மரத்தின் நிழலுக்கு நகர்ந்தாள். மரத்தடியில் இரண்டு நோஞ்சான் சிறுவர்கள் ஒரு முதியவருடன் உட்கார்ந்திருந்தார்கள். அவள் மரத்தில் சாய்ந்தபடி நின்றாள். நின்று நின்று முகுதுத் தண்டு லேசாகச் சுணங்க ஆரம்பித்திருந்தது. டாக்டர் களை நினைக்க பாவமாக இருந்தது. இந்த மாதிரி எத்தனை நோயாளிகளை தினமும் மாரடிக்க வேண்டியிருக்கும்?

''யாருக்கு உடம்பு சரியில்லை?''

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். ஸல்வார் கம்மீஸில் ஒரு பெண். சற்று முன் இவளை அறைக்குள் பார்த்த ஞாபகம் வந்தது.

யசோதாவுக்குள் சட்டென்று ஒரு கூச்சம் எழுந்தது.

''உங்கள் வீட்டில் யாருக்கு உடம்பு சரியில்லை....''

''என்னுடைய மைத்துனனுக்கு. இரண்டு வருஷம் பரீட்சைகளில் ஃபெயிலாகி விட்டான். அதை தாங்க மனசிலே சக்தியில்லே.''

''என்ன செய்வான்?''

''எதிலும் பிடிப்பில்லாமல் இருக்கிறான். சாப்பிடுவதேயில்லை. பேசுவதில்லை. இப்படியே இருந்தானானால் நாளைக்கு ஒரு மனுஷனாய் எப்படி நிமிர்ந்து நிற்கப் போகிறான்னு பயமாக இருந்தது. நாங்களும் தான் எத்தனை நாள் பார்த்துக் கொள்ள முடியும்? காலம் இருக்கிற இருப்பில் யாரால் அதிக பொறுப்பை சுமக்க முடியும்? சொல்லுங்கள்!''

அவள் சின்னப் பெண்ணாகத் தெரிந்தாள். அகன்ற கண்களிலும் சிவந்த உதடுகளிலும் எதிர்காலக் கனவுகள் நிறையத் தெரிந்தன. அந்தக் கனவுகள் சிதைந்து விடுமோ என்கிற கவலையும் யோசனையும் நெற்றியில் மெல்லிய சுருக்கங்களில் நெளிந்தன.

''சரியாகி விடுவார், கவலைப்படாதீர்கள்!''

''சரியாகணும். அதுதான் என் பிரார்த்தனை. அவனுக்கு வேறு யாருமில்லை நாங்கள் தான்.''

''இந்த மனச் சோர்வு சாதாரணமாக அந்த வயசுப் பையன் களுக்கு இருக்கும். ட்ரீட்மெண்ட் கொடுத்தால் சரியாகி விடும்.''

''உங்கள் வீட்டில் யாருக்கு உடம்பு சரியில்லை?''

யசோதாவின் பார்வை பாதைக்குச் சென்றது. ஆட்டோ ரிக்ஷாக்களிலும் கார்களிலும் செல்லும் நோயாளியின் மேல் சென்று மீண்டும் அந்தப் பெண்ணின் மேல் நின்றது.

''என் கணவருக்கு.''

அந்தப் பெண்ணின் புருவங்கள் ஒரு விநாடி வியப்பில் உயர்ந்து கீழே இறங்கின.

''உள்ளே கத்திக் கொண்டிருக்கிறாரே அவரா?''

''ஆமாம்.''

அந்தப் பெண்ணின் பார்வையில் ஒரு யோசனை தெரிந்தது. அகன்ற கண்கள் லேசாகத் தாழ்ந்தன.

''பாவம், உங்களுக்கு ரொம்பக் கஷ்ட மாக இருக்கும். தினமும் இப்படித் தான் கத்துவாரா?''

''கொஞ்ச நாட்களாக.''

''பாவம்.''

நல்ல வேளை. ஏன் என்று கேட்கவில்லை. நாகரிகம் தெரிந்த வள். கத்தல் முழுவதையும் கேட்டிருப்பாளோ? இன்னும் சற்று நேர பரிச்சயத்தில் கேட்டு விட மாட்டாளா?

யசோதா சட்டென்று நினைவுக்கு வந்தவள் போல் லேசாகச் சிரித்தாள்.

''நான் வருகிறேன், டாக்டர் என்னைத் தேடுகிறாரோ என்னவோ!''

அந்தப் பெண்ணின் பார்வையில் ஒரு பரிதாபம் தெரிந்தது.

அதை கவனிக்காத மாதிரி யசோதா அவசரமாக நடந்தாள்.

சர்மா கட்டிலில் கண்ணைமூடியபடி படுத்திருந்தார். ''தூங்க வைத்திருக்கிறோம்'' என்றார் டாக்டர். ''இந்த அறைக்கு என்னுடன் வாருங்கள்.''

அவள் அவர் எதிரில் அமர்ந்தாள்.

''அவர் சரியாகி விடுவாரா டாக்டர்?''

''சரியாகி விடுவார். நம்பிக்கை என்கிற அஸ்திவாரம் இந்த ட்ரீட்மெண்டுக்கு ரொம்ப முக்கியம். உங்களுடைய ஒத்துழைப்பும் ரொம்ப அவசியம் மிஸஸ் சர்மா.''

''நான் சித்தமாயிருக்கிறேன் டாக்டர். ஆனால் நான் எதிரில் வந்தாலே அவருக்குப் பிடிப்பதில்லை. என் முகத்தைக் கண்டாலே அவருக்கு ஆத்திரம் வருகிறது.''

சொல்கையிலேயே கண்களில் நீர் நிறைந்தது. துக்கம் குமுறிக் கொண்டு நெஞ்சை அடைத்தது.

''ஏன் மிஸஸ் சர்மா?'' மிக மிருதுவாகக் குரல் ஒலித்தது. பார்வை மட்டும் தீட்சண்யத்துடன் அவளைத் துளைத்தது.

''என்னுடைய விதி டாக்டர், என்னுடைய தலைவிதி!''

அவள் சட்டென்று உடைந்து போனவளாய் இனியும் அடக்க முடியாது என்கிற நிர்ப்பந்தத்தில் மேஜை மேல் முகத்தைக் கவிழ்த்தபடி குலுங்கக் குலுங்க அழுதாள்.

அவள் ஒரு வழியாக அழுது ஓய்ந்த போது அங்கிருந்த நிசப்தத்தில் அறையில் பொருத்தப்பட்டிருந்த கூலரின் ஒலி துல்லியமாகக் கேட்டது. அவள் கூச்சத்துடன் கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

தீவிர யோசனையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் மெல்லப் புன்னகைத்தார்.

''மிஸஸ் சர்மா! எனக்கு விதியிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. மனுஷனின் இயல்புக்கு, அவன் செயலுக்கு பலமான காரணம் இருக்க வேண்டும் என்று நம்புகிறவன் நான்.''

''காரணங்கள் கற்பனைக் காரணங்களாக இருந்தால்?''

''கற்பனை என்றே வைத்துக் கொள்வோம். அந்தக் கற்பனையைப் போக்குவது உங்கள் பொறுப்பு மிஸஸ் சர்மா.''

அவள் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

''முடியவில்லை டாக்டர். நான் எவ்வளவோ முயன்று பார்த் தாச்சு. முடியவில்லை. ஒரு நாள் சமாதானமாகியிருப்பார். பிறகு மறுபடி ஆரம்பித்து விடுவார், அவனைப் பார்த்தே, இவனைப் பார்த்தே, அவனோடு பேசினே என்னோடு பேசல்லே, அவனோட பேசும்போது சிரிக்கிற அளவு என்னோட பேசும் போது சிரிக்கல்லே. ஓ, காட் இட் இஸ் எ மென்ட்டல் டார்ச்சர் டாக்டர். இருபது வருஷங் களாக நான் அனுபவிக்கும் வேதனை.''

''யார் அந்த 'அவன்' மிஸஸ் சர்மா?''

அவள் ஒரு வினாடி திடுக்கிட்டு அவரைப் பார்த்தாள். பிறகு சிரித்தாள்.

''யார் வேணும்னாலும். ஒரு ஆண் பிள்ளை. எந்த ஆண் பிள்ளையாக இருந்தாலும் சரி. நான் அவர் எதிரில் அவர்களுடன் பேசி சிரித்தால் உடனே ஆங்காரம் வந்துவிடும். சில சமயங்களில் இவருடைய பைத்தியக்காரத்தனமான கோபத்தைப் பார்க்கும் போது எனக்கு என்ன தோன்றும் தெரியுமா டாக்டர்?''

''என்ன தோன்றும்?''

''நிஜமாகவே யாருடனாவது சிநேகிதம் வைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றும்.''

டாக்டர் ஒரு நீண்ட விநாடி நேரம் அவளைப் பார்த்து விட்டுக் கேட்டார்.

''அது வெறும் நினைப்புதானா? இல்லை, செயலிலும் உண்டா?''

''ஓ, நோ!'' என்றாள் அவள் அவசரமாக.

''ஏன்?''

''எனக்கு அந்த மாதிரி உறவுகளில் சிரத்தையில்லை. இவராக தப்பாக எடுத்துக்கொண்டு கத்துவது எனக்கு அதிக துக்கத்தை அதனால்தான் ஏற்படுத்துகிறது. இதுவரை எந்த ஆணிடமும் எனக்கு சிரத்தை ஏற்படட்டதில்லை.''

''ஏற்பட்டதில்லையா, அல்லது ஏற்பட்டதைத் தடுக்கப் பார்க்கிறீர்களா?''

''ஏற்பட்டதில்லை.''

''ஏன்?''

அவள் சற்று பேசாமலிருந்தாள். பிறகு மெல்லச் சொன்னாள்.

''அறிவார்த்தமாக ஏற்படலாம். ஆனால் எமோஷனலாக ஏற்படுவதில்லை. உணர்வு பூர்வமான பிணைப்பு இவருடன்தான் எனக்கு.''

''அவர் அதைப் புரிந்து கொள்ள வைக்க உங்களால் ஏன் முடியவில்லை?''

''அதுதான் விதி டாக்டர். என் தலை விதி.''

டாக்டர் லேசாகச் சிரித்தார்.

''அந்த விதியை மாற்ற வேண்டும் என்கிற எண்ணத்தோடு தானே என்னிடம் வந்திருக்கிறீர்கள்!''

''என்னுடைய விதி மாறுமோ என்னவோ, எனக்கு நிச்சய மில்லை. ஏனென்றால் இவருடைய சுபாவம் இனிமேல் மாறும் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. அவரை வீட்டில் சமாளிக்க முடியாமற் போனதால் உங்களிடம் அழைத்து வந்தேன்.''

''எத்தனை நாட்களாக இப்படிச் சமாளிக்க முடியவில்லை.''

''ஒரு மாசமாக.''

''ஓ காட்! இத்தனை நாட்கள் எப்படிப் பேசாமல் இருந்தீர்கள்?''

''முதலில் இது மனோ வியாதியாக இருக்கும் என்று நான் நம்பவில்லை. இது அவரது வழக்கமான கோபம். அதனால் வரும் ஆங்காரப் பேச்சு என்று நினைத்தேன். செல்லச் செல்ல நிஷ்டூரப் பேச்சும் நச்சரிப்பும் நிற்காமல் நாள் முழுவதும் இருந்தது. ஆஃபீஸிலும் எல்லோருடனும் வாக்குவாதம் செய்கிறார் என்று தெரிய வந்தது. இவருடைய நண்பர் ஒருவருடன் பேசி இவரை இங்கே அழைத்து வருவது என்று தீர்மானித்தேன்.''

அவள் தயங்கிக் கொண்டு மறுபடி கேட்டாள்.

''சரியாகி விடுவாரா டாக்டர்?''

''சரியாக வேண்டும் என்பதுதானே உங்கள் விருப்பம்?''

''இதென்ன கேள்வி டாக்டர்?''

''அவர் சரியாக வேண்டும் என்கிற நினைப்பு இருந்தால் போதாது. உங்களுடைய ஒத்துழைப்பும், அசாத்தியமான பொறுமை யும் வேண்டும்.''

யசோதா பதில் ஏதும் சொல்லாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

''உங்கள் பொறுமை தான் அவருக்கு மருந்து மிஸஸ் சர்மா!''

அவள் சுரீரென்று நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னைவிடப் பொறுமையாக யாராலும் இருக்க முடியாது டாக்டர்! கூட இருந்து பார்ப்பவர்களுக்குத் தான் என்னுடைய அவஸ்தை புரியும். பேசாமலிருந்தாலும் தப்பு, வாயைத் திறந்து ஏதேனும் சொன்னாலும் தப்பு. ஹி இஸ் எ வெரி டிஃபிகல்ட் மேன்...''

டாக்டர் அவளுடைய முதுகை லேசாக தட்டினார்.

''எனக்குப் புரிகிறது. இருந்தும் அவரை சரி செய்வது உங்கள் கையில்தான் இருக்கிறது.''

அவருடைய தட்டலில் ஒரு அனுதாபத்தோடு ஒரு அவசரமும் தெரிந்தது. மற்ற நோயாளிகளைக் கவனிக்க வேண்டும் என்கிற அவசர அறிவிப்பு.

''மருந்து ஏதேனும் உண்டா டாக்டர்.''

''அதிகமில்லை. சில வைட்டமின்களும் காம்போஸும் தான். காம்போஸ் மூன்று முறை. வைட்டமின்கள் இரண்டு முறை, சாப் பாட்டுக்குப் பிறகு. அவருக்கு எந்த வகையிலும் கோபம் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். வேலைக்காரனோடு காரில் தானே வந்திருக்கிறீர்கள். இப்பொழுது அவரை நீங்கள் அழைத்துப்

போகலாம். அடுத்த வாரம் எப்படியிருக்கிறார் என்று தகவல் தெரிவியுங்கள்!''

அவள் வேலைக்காரன் சியாம்லாலின் உதவியுடன் சர்மாவை அழைத்துப் போனாள். வீட்டிற்கு வந்து சற்று நேரம் வரை சர்மா தூக்கத்தில் இருந்தார்.

நிராதரவாகத் தூங்கும் அவரைப் பார்க்கையில் ஐயோ பாவம் என்று கூட இருந்தது. விழித்துக் கொண்டவுடன் அந்த முகம் எப்படி மாறி விடுகிறது! எத்தனை விதமான வக்ரங்கள் மனசில் புகுந்து விடுகிறது! எத்தனை விதமான சிலந்திக் கூடுகள்! அந்தச் சிலந்திக் கூடுகளைத் தானாகவே பின்னி அதில் மாட்டிக் கொண்டு வெளிவரமுடியாமல் - வெளிவர முடியாததற்கு மற்றவர்களை சாடிக்கொண்டு -

ஏன்?

ஏன்?

நாம் என்ன தப்பு செய்தோம்? நிச்சயமாகப் புரியவில்லை. அநியாயமாக ஒரு வாழ்க்கை விரயமாகப் போவதுதான் நிதர்சனமாகத் தெரிந்தது. இந்தக் கோபத்தினாலும் வேண்டாத தடித்த வார்த்தை களினாலும் வாழ்வே நழுவிப் போகிற பிரமை யேற்படுகிறது. விரல்களிடையே நழுவும் ஆற்று மணல் மாதிரி.

'விதி என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை.'

பின் இதற்கு என்ன அர்த்தம்?

அழைப்பு மணி அடிக்கும் ஓசை கேட்டது. சர்மாவின் தூக்கத்தை அது கலைத்து விடுமோ என்கிற பயத்துடன் அவள் வாசலுக்கு விரைந்தாள். பக்கத்து வீட்டு ரவிசங்கர் நின்றிருந்தார். அவளைப் பார்த்து கனிவாகப் புன்னகைத்தார்.

''எப்படியிருக்கிறார்?''

''இப்பொழுது தூங்குகிறார்.''

''டாக்டர் என்ன சொல்கிறார்?''

''நான் ரொம்பப் பொறுமையாக இருக்க வேண்டும் என்கிறார்.''

ரவிசங்கரின் கண்ணில் மறுபடி ஒரு அனுதாபம் தெரிந்தது.

''உங்களைவிட யாரால் பொறுமையாக இருக்க முடியும்?''

''யசோதா!''

அவள் கண்களில் சட்டென்று ஒரு கலவரம் நுழைந்தது.

''ஓ, அவர் விழித்துக் கொண்டு விட்டார்.''

''நான் வருகிறேன். ஏதாவது உதவி வேண்டுமானால் தெரிவியுங்கள்!''

''கண்டிப்பாக. தாங்க்யூ.''

அவள் விரைந்தாள்.

''யசோதா!''

''இதோ வரேன்!''

''நீ வரவேண்டாம். எங்கே போயிட்டே இவ்வளவு நேரம்?''

''எங்கேயும் போகல்லே. இங்கேதான் இருந்தேன்.''

பார்வை கூர்மையாக அவள் மேல் நின்றது.

''யாரோடேயோ பேசற குரல் கேட்டுதே!''

''இப்பத்தான் பக்கத்து வீட்டு ரவிசங்கர் வந்து நீங்க எப்படி இருக்கேள்னு விசாரிக்க வந்தார்.''

சுறுசுறுவென்று அவர் முகத்தில் கோபம் ஏறுவது தெளிவாகத் தெரிந்தது.

''எதுக்கு வந்து விசாரிக்கணும்? புருஷனுக்குப் பைத்தியம் புடிச்சுப் போச்சுன்னு எல்லார்கிட்டேயும் சொல்லிண்டு வரியா?''

''நா யார்கிட்டேயும் எதையும் சொல்லலலே!''

''நீ சொல்லலலேன்னா பின்னே எதுக்கு விசாரிக்க வரான்? பொய் சொல்லாதே. இல்லேன்னா உன்னைப் பார்க்க வந்திருப்பான்!''

அவள் கீழுதட்டைக் கடித்துக் கொண்டாள்.

பொறுமை. பொறுமையாக இருக்க வேண்டும். இவர் யாரையோ சொல்கிறார் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். ஆண்டவனே எனக்குப் பொறுமையைக் கொடு. சுரணை கெட்டதனத்தைக் கொடு. சுரணையேயில்லாமல்....

''என்னா நா சொல்றது காதிலே விழலலே?''

''ஓ, என்ன?''

''இட்ஸ் ஆல்ரைட். என்னோடு பேச உனக்கு இஷ்டமில்லேன்னா உன்னுடைய நேரத்தை நா பாழடிக்கப் போறதில்லே. என்னுடைய பேச்சையும் விரயமாக்கப் போறதில்லே.''

கடவுளே!

அவள் மிகப் பிரயாசையுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கட்டிலில் அமர்ந்து அவருடைய தோளின் மேல் கையை வைத்தாள்.

''எதுக்கு எல்லாத்துக்கும் விதண்டாவாதம் பண்றேள்? என்ன வேணும் சொல்லுங்கோ!''

சர்மா சரேலென்று அவளுடைய கையை உதறினார்.

''எனக்கு ஒண்ணும் வேண்டியதில்லே! நானா விதண்டாவாதம் பண்றேன்?''

அந்தக் கண்களிலும் கன்னச் சிவப்பிலும் இருந்த குரூரத்தைக் கண்டு அவள் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''நா விதண்டாவாதம் பண்றேனா? எவனோடேயோ ஒண்ணரை நாழி பேசிச் சிரிக்க முடியறது. நா ஒரு சாதாரண வார்த்தை கேட்டா அது விதண்டாவாதமா? என்னைக் கண்டாலே உனக்கு அலட்சியமாப் போயிடுத்து. நா பேசினாலே அலுப்பாயிருக்கு. எதைச் சொன்னாலும் விதண்டாவாதமாத் தோணறது.''

அவளுக்கு நிஜமாகவே அலுப்பேற்பட்டது. அங்கிருந்து எழுந்து போய்விட வேண்டும் என்று தீர்மானித்த கால்களை அவள் அவசரமாக நிதானித்தாள். பலவந்தமாகப் புன்னகைத்தாள்.

''ஓ.கே. ஓ.கே, அந்த வார்த்தையை நான் வாபஸ் வாங்கிக்கறேன். என்ன வேணும் சொல்லுங்கோ?''

அவர் ஒரு கணம் விழித்து விட்டுப் பார்வையைத் திசை திருப்பிக் கொண்டார்.

''மறந்து போச்சு. கூப்பிடற சமயத்திலே நீ பக்கத்திலே இருந்தாத்தானே?''

அவள் மறுபடி புன்னகைத்தாள்.

''நா இப்ப இங்கதான் உக்காரப் போறேன். இப்ப ஞாபகப் படுத்திக்கோங்கோ, என்ன வேணும்னு. டீ, ஜூஸ் தண்ணி ஏதாவது வேணுமா?''

''வேண்டாம்.''

அவர் கண்களை மூடிக்கொண்டார். கண் மூடிய நிலையிலும் நெற்றியில் சுருக்கங்கள்.

இவரால் என்றைக்காவது சமாதானமாகிப் போக முடியுமா? எத்தனை நாட்களுக்கு இவருடைய கத்தலை வியாதி என்று நாம் பொறுத்திருக்க முடியும்?

''எனக்காகக் கொஞ்ச நேரத்தை நீ ஒதுக்க முடியுமா?''

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''உங்களுக்காகத்தானே இங்கே உட்கார்ந்திருக்கேன்.''

''ஸே எஸ் ஆர் நோ.''

தன்னுள் எழுந்த சீற்றத்தை அவள் மெல்ல அடக்கிக் கொண்டாள்.

''யெஸ்!''

''அப்ப கொஞ்சம் டீ போட்டுண்டு வா!''

''சரி.''

அவள் மறு பேச்சு பேசாமல் உள்ளே சென்றாள். கேஸைப் பற்ற வைத்துவிட்டு நீரை வைத்தாள். டீ டப்பாவில் டார்ஜிலிங் தேயிலை தீர்ந்து போயிருந்தது!

ஓ, இதற்கும் கத்தப் போகிறார். நமக்கு ஏன் மறந்து போகிறது? இவருடைய இடைவிடாத கத்தலில் எதுதான் ஞாபகமிருக்கிறது

ஒழுங்காக? ஒரு நாளைக்கு மூளை பேதலித்துப் போகப் போகிறது. இப்பொழுதே மரத்துப் போயாகிவிட்டது. சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பிரமை பிடித்து நிற்கிறது. அலங்க மலங்க விழிக்கிறது. காரணம் புரியாமல் கண்களிலிருந்து நீர் வழிகிறது. நமக்கு என்ன சிகிச்சை?

''டீ இன்னும் ஆகல்லே?''

''இதோ வரேன்!''

அவள் அவசரமாக டீயைக் கோப்பையில் ஊற்றி எடுத்துக் கொண்டு போனாள்.

''டீ போடவா இத்தனை நாழி?''

அவள் பதில் பேசாமல் கோப்பையை நீட்டினாள்.

''என்ன டீ இது?''

''ப்ரூக் பாண்ட்.''

மறுபடியும் புருவங்கள் சுருங்கின.

''ஏன் டார்ஜிலிங் இல்லையா?''

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். ''இல்லே தீர்ந்து போச்சு!''

''ஏன் வாங்கிண்டு வரல்லே.''

''மறந்து போச்சு. இன்னிக்கு சாயங்காலம் வாங்கிண்டு வந்துடறேன்!''

''வேண்டாம்! நா கேட்டு வாங்கிண்டு வரவேண்டியதில்லை. எனக்கு நீ பிச்சை போட வேண்டியதில்லே!''

அவள் மறுபடி கீழுதட்டை கடித்துக் கொண்டாள். கோபத்தை உள்ளுக்கிழுத்துக் கொண்டாள். கண்களில் நீராய் கிளம்புவேன் என்று அது பயமுறுத்தியது. திடீரென்று ஒரு புழுக்கம் கிளம்பி அவளை சுவாசிக்க முடியாமல் தடுத்தது. அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள். இது வியாதி. பிரக்ஞையோடு சொல்லப்படும் வார்த்தைகள் இல்லை.

இதற்குப் பொறுமைதான் மருந்து.

பொறுமை.

எத்தனை காலத்துக்கு நம்மால் அதைக் கடைப்பிடிக்க முடியும்? ஆயுசு உள்ளவரை....

இவர் மாறுவதற்குள் நம் ஆயுள் முடிந்துவிடப் போகிறது.

அவள் சிறிது நேரம் பேசாமல் இருந்தாள். எந்த மாதிரி வார்த்தைகளைக் கோர்த்தால் இவருக்குக் கோபம் வராது என்று யோசித்தபடி.

''காப்பி கலந்துண்டு வரட்டுமா?''

''நோ!''

அவள் பேசாமல் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டாள்.

சர்மா டீக் கோப்பையை அப்படியே வைத்துவிட்டு டெலிபோன் அருகில் சென்று பரபரப்பாக எண்களைச் சுழற்றினார்.

''யாரு கிஷண்ஸிங்கா? நா பார்க்க வேண்டிய பைல்களை யெல்லாம் வீட்டுக்கு அனுப்பு. நாளைக்கு ஆ∴பீஸுக்குப் போகப் போறேன். நாளைக்கு ஞாயிற்றுக்கிழமையா? அப்ப நாளன்னிக்கு வருவேன். வாட் டி∴பரன்ஸ் டஸ் இட் மேக்? உடம்புக்கு ஒன்று மில்லையே! நன்றாகத்தான் இருக்கிறேன். ∴பைல்களை அனுப்பு!''

டெலிபோனை வைத்ததும் அவருடைய பார்வை அவளைத் துளைத்தது.

''உயிரோடு எனக்கு சமாதி கட்டப் பார்க்கிறியா? எனக்கு உடம்பு சரியாயில்லேன்னு எத்தனை பேர்கிட்ட தண்டோரா போட்டிருக்கே?''

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். அந்தக் கண்களில் தெரிந்த வெறுப்பு அடிவயிற்றைக் கலக்கிற்று.

''நீங்க சாதாரணமா எல்லாரையும் போல இருந்தா நா கவலைப்பட மாட்டேன். என்னை நீங்க ஏன் நம்பமாட்டேன் என்கிறேள்?''

''சொல்றேன்! நா எப்பத் தொலைவேன்னு நீ காத்திண்டிருக்கே. அதனாலேதான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எனக்குப் பைத்தியக்காரப் பட்டம் கட்டி வைக்கப் பார்க்கறே!''

''அதனாலே எனக்கு என்ன லாபம்?''

''அப்பத்தானே நீ உன் இஷ்டப்படி சுதந்திரமா இருக்கலாம்!''

அவளுக்குக் கண்களிலிருந்து நீர் பெருகிற்று.

இவர் ஏன் இப்படி வதைக்கிறார்? இவருக்கு உண்மையில் வியாதியா, அவரது குரூரத்தனம் அவரது இயல்பா?

''இதோ பாருங்க. இதே மாதிரியே சதா சர்வகாலமும் பேசிண்டிருந்தா நம்ம உறவிலே நெருக்கம் ஏற்படாது. நா இந்த வீட்டிலே இருக்கணுமா, வேண்டாமா?''

''நா இருக்கணுமா, வேண்டாமா?''

அவள் நிராசையுடன் முகத்தை திருப்பி ஜன்னலுக்கு வெளியே பார்வையை ஓட்டினாள். இது ஒரு வக்கிர வழக்கம். அவள் எந்தக் கேள்வி கேட்டாலும் எதிர்க்கேள்வி கேட்கும் வழக்கம். இந்த மனுஷனுடன் ஆயுசு முழுக்க மாரடித்துக் கொண்டு நாம் என்ன சாதிக்கப் போகிறோம் என்று எழுந்த எண்ணத்தை அவள் மறுபடி அமுக்கினாள்.

''உனக்குத்தான் என்னைக் கண்டாப் பிடிக்கல்லே. நா எதைக் கேட்டாலும் சரியா பதில் சொல்றதில்லே. இன்னொருத்தன் ஏதாவது கேட்டா உடனே குழைஞ்சிண்டு பதில் சொல்லுவே. சிரிச்சுண்டு பேசுவே. என்கிட்டே எப்ப சிரிச்சுப் பேசறே நீ?''

அவள் எதுவும் பேசாமல் ஜன்னல் வழியே தெரிந்த ஆகாசத்தைப் பார்த்தாள். இரண்டு சிட்டுக் குருவிகள் சிறகடித்துக் கொண்டு பறந்தன. இந்த மனுஷப் பிறவி ஒரு அரிய பிறவி என்று சொன்னது ஒரு ஆண் மகனாகத்தானிருக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

''நா கிழவனாயிட்டேன். உனக்கு நா அலுத்துப் போச்சு. எங்கிட்டே நீ சிரிச்சுப் பேசுவியா?''

சிட்டுக் குருவிகள் மரக் கிளையில் உட்கார்ந்தன. ஒன்றுக் கொன்று அலகினால் கொத்திக்கொண்டு சல்லாபித்தன. இவை களுக்கு 'நான்' என்கிற எண்ணமும் நிஷ்டூரப் பார்வையும் இருந்தால் இத்தனை இயல்பாக சல்லாபிக்க முடியாது....

''ஒவ்வொரு நிமிஷமும் என்னை நீ அலட்சியம் பண்றே. அன்னிக்கு நடராஜன் வந்திருக்கான். நான் ஏதோ கேள்வி கேக்கறேன். அதற்குப் பதில் சொல்லாம அவன்கிட்டே பேசிண்டிருக்கே...''

மறுபடியும் அவளுள் கோபத்தின் ஜ்வாலை திகுதிகு வென்று கிளம்பிற்று. இவருக்குத் தன்னிடம் தப்பு கண்டு பிடிப்பதைத் தவிர வேறு வேலையே கிடையாது என்று அலுப்பேற்பட்டது. நம்மை இயல்பாக ஏன் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்? தப்பே தோன்றாத மனசாக இவர் மனசு என்றாவது மாறுமா? ஓ, அதற் கெல்லாம் ஒரு பெருந்தன்மை வேண்டும். அன்பு செலுத்தும் மனசு வேண்டும். அதெல்லாம் இல்லாததால்தான் நம் அன்பைச் சந்தேகிக்கிறார்.... நம் நோக்கத்தைச் சந்தேகிக்கிறார்...

''நெஞ்சழுத்தம்! அத்தனையும் நெஞ்சழுத்தம். வாயைத் திறக்கிறாளா பாரு....!''

அவள் சட்டென்று திரும்பினாள். அந்த முகமும் அந்த சிடுசிடுப்பும்...

கடவுளே - நான் எப்படிப் பொறுமையா இருப்பேன்? இது வியாதிதானா? இருபது வருஷமாக என்னைக் கண்டால் மட்டும் பற்றிக் கொள்ளும் ஆங்காரம் ஒரு வியாதியாக பரிணமித் திருக்கிறதா?

''உங்கள் ஒத்துழைப்பு பூரணமாக இருந்தால்தான் அவரைக் குணப்படுத்த முடியும் மிஸஸ் சர்மா.''

எப்படி இது. வார்த்தைகளால் என்னைக் கொல்லும் வியாதியாக இருக்கிறதே? அனுசரணையாக இருக்க இருக்க இன்னும் வக்ரமாகிப் போகிறதே?

அவள் மெல்ல அவரருகில் உட்கார்ந்து கொண்டாள். அவருடைய கைகளை பலவந்தமாகத் தன் கைகளில் கோர்த்துக் கொண்டு மெல்லப் புன்னகைத்தாள்.

''கொஞ்சம் கவனிச்சுப் பார்த்தேள்னா நா அவ்வளவு மோசமில்லேன்னு தெரியும். உங்களைவிட்டா எனக்கு யாரும் கிடையாது. சாகிற வரை உங்களோடு எனக்கிருக்கிற பிணைப்பு தான் சாச்வதம்னு நா ஒவ்வொரு நிமிஷமும் நினைச்சுண்டிருக்கேன். பரஸ்பர தோழமை எவ்வளவு முக்கியம்னு நா நினைச்சுக்கறேன். அப்படியிருக்கறச்சே உங்களை அலட்சியப் படுத்தணும்னு நா எப்படி நினைப்பேன்? நீங்களா எதையாவது கற்பனை பண்ணிண்டு உங்களையும் வருத்திண்டு என்னையும் ஏன் வருத்தறேள்?''

''கவலைப்படாதே. இனிமே வருத்தல்லே. நீ உன் இஷ்டப்படி இருந்துக்கலாம்.''

அவள் காதிலே விழாத மாதிரி தொடர்ந்தாள்.

''நா என்ன தப்பு பண்றேன்னு அலையாம என்கிட்டே ஏதாவது நல்ல குணம் இருக்கான்னு கண்டுபிடிக்க முயற்சி பண்ணுங்களேன்! இந்த இருபது வருஷ வாழ்க்கை, தர்க்கத்திலேயே கழிச்சாச்சுங்கறதை நினைக்கிறப்போ நாம கடவுளோட படைப்பையே அவமதிச்சுட்ட மாதிரி, கல்யாணம் என்கிற ஸ்தாபனத்தை அவமானப் படுத்திவிட்ட மாதிரி தோணறது.''

அவர் அவளுடைய கையை வெடுக்கென்று உதறினார்.

''நீ என்னை அவமதிச்சுண்டு இருக்கிற வரைக்கும் இந்த தர்க்கம் இருக்கும். நா உனக்கு அடிமையா, ஆமாம் சாமி போடறவனா இருக்கணும்னு ஆசை உனக்கு. இந்த ஜன்மத்தில் அந்த ஆசை நிறைவேறாது.''

கோபத்திலும் அவளுக்கு சிரிப்பு வந்தது. எப்படிப்பட்ட விதண்டா வாதம்!

''அடிமைத்தனமோ, அதிகாரமோ எது இருந்தாலும் அது தாம்பத்யமா இருக்காது. நா கேக்கறது தோழமை. உங்களுக்காக நா, எனக்காக நீங்கன்னு ஒரு பந்தம் ஏற்பட்டப்பறம் அதை மதிச்சு ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையா நடக்கணும்கிற நிர்ப்பந்தம் இருக்கு. பரஸ்பர எண்ணங்களுக்கு மரியாதை கொடுக்கணும்கற கட்டாயம் இருக்கு....''

அவளுக்கு நெஞ்சு படபடத்துக்கொண்டு வந்தது. இருபது வருஷ ஆதங்கமெல்லாம் வெளியில் வருவேன் என்று துருத்திக் கொண்டு நின்றது.

''எனக்கு நீ உபதேசம் பண்ற நிலைமையிலே நா இல்லே....!''

''நீங்க தவறினா நா உபதேசம் பண்றதும் நா தவறினா நீங்க உபதேசம் பண்றதும் எந்த வகையிலும் தப்பில்லே!''

''நீ இப்ப வாயை மூடப் போறதில்லே?''

திடீரென்று அவளுள் ஒரு வெறி ஏற்பட்டது.

''முடியாது. மூடமாட்டேன். எனக்கும் வயசாயிண்டு வரது. மனசும் உடம்பும் சோர்ந்து போயிடறது. இனிமேயாவது என்னை சகஜமா ஏத்துக் குங்கோ. சரளமாப் பழகுங்கோ. நா சாதாரண மனுஷிதான். குறைகள் இல்லாம இருக்காது. அதைப் பெரிசு பண்ணி தப்பா எடுத்துக் காதீங்கோ, சத்தியமாச் சொல்றேன். எனக்கு உங்க பிரியம் தான் முக்கியம். உங்க தோழமைதான் முக்கியம்...'' அவளுக்கு கண்களில் நீர் வழிந்தது.

''பொய்! சுத்தப் பொய்! இது நிஜமா இருந்தா என்னை நீ இப்படி அலட்சியம் பண்ணமாட்டே!''

''எப்படி? எங்கே அலட்சியம் பண்ணறேன்? நீங்களா கற்பனை பண்ணிக்கறேள்!''

சர்மாவின் முகம் ரௌத்ரமாகச் சிவந்தது.

''கற்பனையெல்லாம் உனக்குத்தான்டீ. என்னை உலகத்துக்கு வில்லனாக் காண்பிக்கறதும் நீதான்.''

அவள் திகைத்துப் போய் அவரைப் பார்த்தாள்.

''காண்பிச்சு எனக்கு என்ன லாபம்?''

''அப்பத்தானே உன் நடவடிக்கைகளுக்கு சமாதானம் கிடைக்கும்! இதப்பார், உன் சொல்லுக்குக் கீழ் படிஞ்சு நடப்பேன்னு நினைக்காதே. நீ என்ன பண்ணாலும் நா வாயை மூடிண்டு இருக்கணும்னு எதிர்பார்க்காதே. நா சொல்றபடிதான் நீ நடக்கணும். தோழமை கீழமை என்கிற பேச்செல்லாம் இங்கே வேண்டாம்.''

அவள் மெல்ல திரும்பி அவரைப் பார்த்தாள். அந்த முகத்திலிருந்த சிடுசிடுப்பைப் பார்க்கும்போது இந்த இருபது வருஷங்களாக அவருடைய முகத்தில் பிரஸன்னத்தையே தான் பார்த்ததில்லை என்று ஞாபகத்திற்கு வந்தது. திடீரென்று அவளுக்கு சிரிக்க வேண்டும் போல் இருந்தது. அவள் பொறுமையாக இருந்து சாதிக்கக் கூடியது ஏதும் இல்லை என்று புரிந்தது. இவருடைய சுபாவத்துக்கான காரணம் தெரிந்தது...

இவருக்கு ஏதும் பிரத்தியேக வியாதி இல்லை.... ஆதி மனிதன் காலத்திலிருந்து பீடித்திருக்கும் வியாதி இது. அவள் குனியக் குனிய அதிகமாகக் கூடிய வியாதி....

இந்த மாதிரி ஒரு ஆணிடம் அன்புப் பிச்சை கேட்பதும் தோழமை வேண்டி நிற்பதும் கூட ஒரு வியாதிதான்.

இந்த வியாதி என் மூதாதையரிடமிருந்து தொடர்ந்து வருகிறது. இவருடைய வியாதி இவரிடம் தொடர்ந்து வருகிறாற்போல. இவருடைய வியாதியைப் போக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.

அவள் எதுவுமே பேசாமல் உள்ளே சென்றாள். ஒரு சிறிய பெட்டியில் தன் உடுப்புகளை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். எந்தவித வரவுமில்லாமல் தன்மானத்துக்கு விழும் அடிகளைத் தாங்கிக் கொண்டு அடிமை வாழ்வு வாழ்வதை விடத் தனியாக இருப்பது மேல்.

அவள் சர்மாவைக் கடந்து போனாள்.

''நா போறேன்'' என்றாள் மெல்ல. ''நா உங்களுக்கு இனிமே தேவையில்லேன்னு தெரிஞ்சு போச்சு. உங்களுக்கு ஏதும் வியாதி யில்லேன்னு புரிஞ்சுண்டேன். இந்த வீட்டை கவனிக்க ஒரு ஹவுஸ் கீப்பர் இருந்தா போறும். ஒரு மனைவி வேண்டாம்!''

''போறியா? எங்கே?''

''எங்கேயோ தெரியாது. ஒரு வயிற்றைக் கழுவ ஏதும் கஷ்டமில்லை.''

அவர் திடீரென்று கத்தினார்.

''போயேன்! தாராளமாப் போ! எத்தனை நாளா இப்படிச் செய்யணும்னு நினைச்சுண்டிருந்தியோ. போ எவன் உனக்காகக் காத்திண்டிருக்கானோ அவனோட இரு போ!''

இப்பொழுது இந்த வார்த்தைகள் குத்தவில்லை. கண்ணில் நீரை வரவழைக்கவில்லை.

இப்படிப் பேசுவது அவருக்கு சமாதானமாக இருந்தால் பேசிவிட்டுப் போகட்டுமே என்று புன்னகைத்தபடி அவள் வெளியே நடந்தாள்.

✿